

30.10.2026 செய்திகள்

இணையவழி மோசடிகளுக்கு வங்கிகள் இழப்பீடு

- இணையவழிக் குற்றங்கள் 50 சதவீதம் வரை குறைந்திருந்தாலும் நிகழாண்டில் தற்போது வரை எண்மக் கைது மற்றும் பிற இணையவழி மோசடிகளால் ரூ.800 கோடி இழப்பீடு ஏற்பட்டுள்ளது.
- இதுபோன்ற மோசடிகளைத் தடுக்க ரிசர்வ் வங்கி முன்மொழிந்துள்ள வாடிக்கையாளரை அறிந்துக் கொள்ளும் சேவை (கேஒய்சி) வழிகாட்டுதல்கள், 2026 அமலாகும் முன்னர் அதை உச்சநீதிமன்றம் ஆய்வு செய்துள்ளது?
- இந்த வழிகாட்டுதல்கள் பொது அறிவுறுத்தல்களைப் போன்று இல்லாமல் நிதி நிறுவனங்கள் கட்டாயம் பின்பற்ற வேண்டிய நடைமுறைகளாக இருக்க வேண்டும்.
- முறையாகப் பின்பற்றாத நிதி நிறுவனங்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.
- குறிப்பாக, வங்கிகள் அல்லது நிதிநிறுவனங்களின் கவனமின்மையால் எண்ம மற்றும் இணையவழி மோசடியில் பணத்தை இழப்பவருக்கு, அந்த இழப்புத் தொகைக்கு குறையாமல் கட்டாயம் இழப்பீடு வழங்கும் அம்சங்கள் வழிகாட்டுதல்களில் இடம்பெற வேண்டும்.

» படித்தவர்கள் ஏமாறுவது அதிர்ச்சி

- வாடிக்கையாளரின் வங்கிக் கணக்கில் சந்தேகத்துக்குரிய விதமாக பரிவர்த்தனைகள் மேற்கொள்ளப்படுவது கண்டறியப்பட்டால் அவற்றுக்குத் தற்காலிக தடை விதித்து உடனடியாக வாடிக்கையாளரை நேரில் அழைத்து விசாரிக்க வேண்டும்.
- வாடிக்கையாளர் எண்மக் கைது மோசடியில் சிக்கியுள்ளதாக சந்தேகம் எழுந்தால் அருகிலுள்ள காவல் நிலையத்தில் இது தொடர்பாக தகவல் தெரிவிக்க வேண்டும்.
- இந்த மோசடியில் நன்கு படித்தவர்களும் ஏமாறுவது அதிர்ச்சியளிக்கிறது. எண்மக் கைது மோசடியால் பல கோடியை மக்கள் இழப்பது தொடரும் சூழலிலும் அதைக் கட்டுப்படுத்த வலுவான கட்டமைப்பை நாம் இன்னும் ஏற்படுத்தவில்லை.
- வங்கிக் கணக்குகளை வங்கிகள் வகைப்படுத்தாமல் இருப்பது ஏன்? திடீரென தாங்கள் சேமித்த மொத்த பணத்தையும் வழக்கத்துக்கு மாறாக வேறொரு வங்கிக் கணக்குக்கு பரிமாற்றம் செய்ய வாடிக்கையாளர்கள் முயல்கிறபோது அதுகுறித்து வங்கிகள் அவரிடம் கேள்வியெழுப்பாதது ஏன்?